தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

முதலாம் ஆண்டு – முதற் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - 2016

**P201** மொழிபெயர்ப்பியல்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. பாரசீக மொழியில் உள்ள உமர்கய்யாம் பாடல்களை தமிழில் மொழிபெயர்த்தவர்களில் சிறந்தவர் யார்?
2. தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட காளிதாசனின் நூல்கள் யாவை?
3. தமிழ் ஆட்சித்துறையில் இடம் பெற்றுள்ள அரபுச்சொற்கள் நான்கினை எழுதுக.
4. ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த தமிழ் நூல்கள் யாவை?
5. பின்னொட்டிற்கு இரண்டு உதாரணம் தருக.
6. இரட்டை கூட்டுப் பெயர்கள் உதாரணம் தருக.
7. தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட புகழ்பெற்ற ரஷ்யப் புதினங்கள் யாவை?
8. தமிழில் ஹைக்கூ கவிதை வளர்ச்சிக்கு வித்திட்ட மொழி யாது?
9. உலகளாவிய சமய வளர்ச்சியில் மொழிபெயர்ப்பில் முதலிடம் பெற்ற நூல் எது?
10. வங்க மொழியில் யார் யாருடைய படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன?
11. Intial, tele எனும் ஆங்கில சொற்களின் தமிழாக்கம் தருக.
12. தலைப்பெழுத்தாக்கம் என்றால் என்ன?
13. கடன் நீட்சி என்றால் என்ன?
14. மறைமலையடிகள் தமிழில் மொழிபெயர்த்த சாகுந்தல நாடகத்தின் மூல நூல் யாது?
15. முன்னொட்டுக்கு இரண்டு உதாரணம் தருக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. வழிமொழி விளக்கம் தருக.
2. வட்டார வழக்கு சொற்கள் சொல் சேகரிப்பு மூலங்களாக விளங்குவதற்கு இரு உதாரணங்கள் தருக.
3. சின்னமனூர் செப்பேட்டுக் குறிப்புகள் மொழிபெயர்ப்புப் பற்றி சுட்டுவனவற்றை எழுதுக.
4. மொழிபெயர்ப்பின் தேவைகளைக் குறிப்பிடுக.
5. சொல்லாக்க வகைகளில் கூட்டு வினைகள் பற்றி எழுதுக.
6. தருமொழி, பெறுமொழி - விளக்குக.
7. கலைச்சொல்லாக்க நெறிகள் யாவை?
8. பம்மல் சம்பந்த முதலியார் தமிழில் தந்த ஷேக்ஸ்பியர் நாடகங்கள் பற்றி எழுதுக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) மொழிபெயர்ப்பில் இதழியல் ஆற்றிய பங்கினை எழுதுக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பில் பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களின் பங்களிப்பை விவரிக்க.

2. (அ) சொல்லாக்கமும் மொழி மாற்றமும் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பின் இடர்ப்பாடுகள் குறித்து விவரிக்க.

3. (அ) மொழிபெயர்ப்பில் சொல்லாக்க நெறிமுறைகள் பற்றி பாவாணரின் கருத்துக்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) காலந்தோறும் மொழிபெயர்ப்புக் கலைப் பெற்ற வளர்ச்சியையும் மாற்றத்தையும் விவரிக்க.

*** *